**காரைக்குடி நகராட்சி**
**16.10.2018ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 16.10.2018 | 1 | தமிழக அரசின் அரசாணை (பல்வகை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (MA) துறை நாள் 26.07.2018–ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் காரைக்குடி நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் மாற்றியமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர்/ குடியிருப்போர்/ குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாக கொண்டு இருக்கும்.<br>காரைக்குடி நகராட்சி பகுதியில் உள்ள உரிமையாளர்கள்/ குடியிருப்போர்/ குத்தகைதாரர் அவர்கள் வசம் உள்ள சொத்துகள் பற்றிய விபரங்கள் அடங்கிய சொத்து விபர அறிக்கைகளை 24.11.2018–க்கு முன்னதாக இவ்வலுவலகத்திற்கு வந்து சேருமாறு சமர்ப்பிக்கும்படி சொத்து உரிமையாளர்கள்/ குடியிருப்போர்/ குத்தகைதாரர்களை கேட்டுக் கொள்ளப்பட்டும் சுயமதிப்பீட்டு அறிக்கை படிவங்களை இந்நகராட்சி அலுவலகத்திலோ அல்லது நகராட்சி இணையதளத்தின் மூலமாக பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும் சுயமதிப்பீட்டு படிவங்களை குறிப்பிட்டக் காலத்திற்குள் சமர்பிக்க தவறினால் நகராட்சியே தன்னிச்சையாக சொத்து மதிப்பீட்டை திருத்தியமைக்கும் எனவும் மண்டல மதிப்பு மறு மதிப்பீடு செய்யப்பட்டு தினசரி நாளிதழில் வெளியிடு செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் ஆட்சேபனைகளை எழுத்து பூர்வமாகவோ அல்லது தபால் மூலமாகவோ ஆணையர், காரைக்குடி நகராட்சி என்ற முகவரியில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டு 12.09.2018 ஆம் தேதிய தினமலர் நாளிதழில் சொத்து வரி திருத்த அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டது.<br>ஆனால் அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபணை ஏதும் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வரப்பெறவில்லை. எனவே 06.09.2018 ஆம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.140–ல் நிர்ணயிக்கப்பட்டப்படி, கீழ்க்கண்டவாறு மண்டல மதிப்பை உறுதி | தீர்மான எண்.175 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செய்து மன்றம் ஒப்புதல் அளிக்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><td rowspan="2">மண்டலம்</td><td colspan="3">ஒரு சதுர அடிக்கு உயர்த்தப்படும் அடிப்படை மதிப்பு</td></tr>
<tr><td>மண்டலம்–1<br>(A Zone)</td><td>மண்டலம் –II<br>(B Zone)</td><td>மண்டலம்–III<br>(C Zone)</td></tr>
<tr><td>குடியிருப்பு கட்டிடங்கள</td><td>ரூ.2.40</td><td>ரூ.2.00</td><td>ரூ.1.40</td></tr>
<tr><td>தொழிற்சாலை கட்டிடங்கள்</td><td colspan="3">குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து இரண்டு மடங்கு</td></tr>
<tr><td>வணிக கட்டிடங்கள்</td><td colspan="3">குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து மூன்று மடங்கு</td></tr>
</table>
01.04.2017 முதல் 31.03.2018 வரை வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரி கட்டிடங்களுக்கு சொத்துவரி சீராய்வு இல்லை.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>2</td>
<td>இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு ஜுலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்திற்கான அரிசி வாங்கியதை ஏற்றி, இறக்க கூலி மற்றும் வண்டி வாடகைக்கு ரூ.4500/– ரூபாய் நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) மகளிர் சுய உதவி குழுவின் தலைவி கஸ்தூரி அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.6529/2014/அ3)</td>
<td>தீர்மான எண்.176<br>அலுவலகக்குறிப்பு<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **3** | காரைக்குடி நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்கள் சுற்று வேலி இல்லாமல் உள்ளது. இதனால் ஆக்கிரமிப்பு ஏற்படும் நிலை உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களை சுற்றுவேலி அமைத்து ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாக்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு<br>1. பாரதி நகர் – I<br>2. பாரதி நகர் –II<br>3. செல்லஞ்செட்டி ஊரணி<br>4. ராகவேந்திரா பள்ளி அருகில்<br>5. வைத்தியலிங்கபுரம் – I<br>6. வைத்தியலிங்கபுரம் – II<br>7. வடிவேல் அம்பலம் மனைப்பிரிவு<br><br>மேற்கண்ட இடங்களுக்கு சுற்றுவேலி அமைக்க ஆகும் மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.177 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **4** | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, திடக்கழிவு மேலாண்மை கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.எண்.K.Dis.No 21635/2018/P3 நாள் 02.08.2018–ன் உத்தரவின்படி திருவண்ணாமலை நகராட்சியிலிருந்து ஒரு காம்பேக்டர் வாகனம் 4.00 MT Capacity (Without Collection Bin) வாகன பதிவு எண். TN 25 AQ 8404 ஐ வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் திருவண்ணாமலை நகராட்சியிலிருந்து காரைக்குடி நகராட்சிக்கு பெறப்பட்ட காம்பேக்டர் வாகனத்தில் பதிவேட்டில் பதிவு செய்தும், வாகனத்தை நகராட்சி ஆணையர், காரைக்குடி என பெயர் மாறுதல் செய்திடவும், இவ்வாகனத்தை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தி கொள்ளவும், இவ்வாகனத்திற்கு ஆகும் பராமரிப்பு செலவினத்தை நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு.**<br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3400/2018/எச்1) | தீர்மான எண்.178 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 5 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தர ந.க.எண்.21635/2018/ பி3 நாள் 02.08.2018–ன்படி திருவண்ணாமலை நகராட்சியிலிருந்து காரைக்குடி நகராட்சிக்கு காம்பேக்டர் வாகனம் எண். TN25 AQ 8404 ஐ வழங்க உத்தரவு பிறப்பித்ததின் பேரில் மேற்கண்ட வாகனத்தை திருவண்ணாமலை நகராட்சியிலிருந்து காரைக்குடி நகராட்சிக்கு கொண்டு வர கீழ்க்கண்ட விபரப்படி டீசல், டோல்கேட் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.<br>1) டீசல் 10 லிட்டம் = ரூ.762.50<br>2) டோல்கேட் கட்டணம் = ரூ.145.00<br>3) டயர் பஞ்சர் கட்டணம் = ரூ.750.00<br>-----<br>1657.00<br>------<br>எனவே மேற்கண்ட தொகை ரூ.1658/– ஐ வாகன ஓட்டுநர் திரு.எஸ்.கணேஷ் என்பவரால் செலவிழிக்கப்பட்டுள்ளதால் அத்தொகை திரு.எஸ்.கணேஷ் ஓட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.179 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 6 | சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் திருமதி.எம்.விசாலாட்சி, காரைக்குடி என்பவரால் வழக்கு எண்.20947/2018–ல் இந்நகராட்சி ஆணையரை 4–வது பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை எடுத்து நடத்திட திரு.பி.மகேந்திரன், வழக்கறிஞர் மதுரை அவர்களை நியமனம் செய்திடவும், அதற்கான செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4142/2018/எப்2) | தீர்மான எண்.180 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>7</td>
<td>சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் திரு.கே.நௌசத் அலிகான் என்பவரால் WP(MD) NO.21369/2018 –ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் 1–வது பிரதிவாதியாக நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை 2–வது பிரதிவாதியாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகஙகை 3–வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சியர் சிவகஙகை 4–வது பிரதிவாதியாக நகராட்சி ஆணையர் காரைக்குடி நகராட்சி மற்றும் 5வது பிரதிவாதியாக உரிமையாளர் கொழும்பு ஸ்டோர் ஆகியோர்களை சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்திட திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞர் மதுரை அவர்களை நியமனம் செய்யவும், வழக்கிற்கான செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4906/2018/எப்2)</td>
<td>தீர்மான எண்.181<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>8</td>
<td>இந்நகராட்சி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பிற பணிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ..எண்.</th><th>விளம்பர விபரம்</th><th>விளம்பரம்<br>செய்த நாளிதழ்/ நாள்</th><th>தொகை<br>ரூ.</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின் கீழ் நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணி செய்திட ஒப்பந்தப் புள்ளி கோரியது</td><td>தினசெய்தி<br>மற்றும் டிரினிட்டி மிரர்<br>29.08.2018</td><td>ரூ.57,497/–</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் ( TURIP -2018-2019) ன் கீழ் சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது</td><td>தினசெய்தி<br>மற்றும் டிரினிட்டி மிரர்<br>29.08.2018</td><td>ரூ.57,497/–</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சியில் பயன்பாட்டில் இல்லாத வாகனங்களை கழிவு நீக்கம் செய்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல அறிவிப்பு விளம்பரம் செய்த பணிக்கு</td><td>தினசூரியன்<br>12.09.2019</td><td>ரூ.14,112/–</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>மொத்தம்</td><td>ரூ.159106/–</td></tr>
</table>
மேற்கண்ட விவரப்படி பட்டியல் தொகை ரூ.159106/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி</td>
<td>தீர்மான எண்.182<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 9 | காரைக்குடி நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் 2018–2019ம் ஆண்டிற்கு அரசாணை எண்.388 நிதி ( ஊதியம்) துறை நாள் 06.11.2012–ன்படி நபர் ஒருவருக்கு தொகை ரூ.5000/– வீதம் தீபாவளி பண்டிகை முன் பணம் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.183 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 10 | இந்நகராட்சி வார்டு எண்.1–ல் உள்ள கழனிவாசல் நகர்மன்ற நடுநிலைப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்கும் பணி செய்திட12.08.2014–ல் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இறுதி பணியாக சுற்றுச் சுவர் அமைக்கும் பணி முடியும் தருவாயில் திரு. அரசு சோமன் என்பவர் காரைக்குடி நகராட்சி ஆணையர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். அதன் வழக்கு எண். WP(MD) NO.21470/2018-ல் நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன் பிஏ.பி.எல் வழக்கறிஞர் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை அவர்கள் ஆஜராகவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.7500/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தனி அலுவலர்<br>காரைக்குடி நகராட்சி | தீர்மான எண்.184 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

**காரைக்குடி நகராட்சி**
**ம் தேதி நடைபெற்ற சாதரணக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**
**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **16.10.2018** | **1** | தேவகோட்டை சாலையில் உள்ள இந்நகராட்சியின் உரக்கிடங்கல் ( Compost Yard) தினசரி சேரமாகும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்கும் பணிக்காக இயங்கி வந்த Pre- processing unit – க்கான மின் இணைப்பு பெட்டியில் பொருத்தப்பட்டிருந்த 32 Amps Contactor – 3 எண்ணம் அதிக மின் அழுத்தம் காரணமாக எரிந்து விட்டன. அதனால் கடந்த 25.09.2018 முதல் மேற்படி இயந்திரம் செயல்படாமல் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட எரிந்து போன 3 Contactor பதிலாக புதியது வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.17,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:–<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.185 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | **2** | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிக்கு பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த நிலையில் உள்ள பொருட்களை எடுத்துச் செல்வதற்கான மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.07.2018 மற்றும் 10.08.2018 அன்று நடைபெற்ற மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை நேரடியாக வீடியோ கவரேஜ், குறுந்தகடு மற்றும் புகைப்படஙகள் எடுத்தமைக்கு உதய போட்டோஸ் அன் வீடியோஸ் அவர்களுக்கு தொகை ரூ.5000/– ஐ வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:–<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.186 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>3</td>
<td>
காரைக்குடி நகராட்சியில் 2017–2018 நிதியாண்டிற்கான சொத்துவரி , காலியிட வரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் பல்வகை கேட்பு ஆகியவைகளுக்கான நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள் Binding செய்யும் பணிக்கு ரூ.6,000/– உத்தேச செலவினம் ஆகும். மேற்படி பணி மேற்கொள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவன பெயர்</th><th>Binding ஒன்றுக்கான விலைப்புள்ளி தொகைரூ.</th></tr>
<tr><td>1</td><td>MAHA Print Solutions<br>22A,College Road, Subramaniyapuram 4th st<br>Karaikudi</td><td>46</td></tr>
<tr><td>2</td><td>Hari Madhesh Binding<br>22, Municipal Commercial Complex Ariyabhavan<br>Hotel Near Karaikudi</td><td>40</td></tr>
<tr><td>3</td><td>Poocharam Traders,<br>8College Road, Subramaniyapuram 7th st<br>Karaikudi</td><td>60</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s. Hari Madhesh Binding , Karaikudi நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு.</u><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.மேற்கண்ட செலவின தொகையினை பொது நிதியின் கீழ் செலவு செய்ய மன்ற அனுமதிக்கலாம்.<br>
3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.9192/2012/அ2)
</td>
<td>தீர்மான எண்.187<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 4 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.8, 100அடி கீழமேல் ரோடு புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு புதிதாக வரிவிதிப்பு செய்வதை எதிர்த்து திருமதி.சாந்தி க/பெ.சுப்பையா என்பவரால் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு ஒ.எஸ்.எண்.28/2009–ல் வழக்கு தொடுத்ததில், மேற்படி வழக்கிற்கு 31.03.2011–ல் நகராட்சி சட்ட விதிகளுக்கு உட்படுத்தி வரிவிதிக்குமாறு தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் இடம் நேராய்வு செய்து அளவீடு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு இரு வரிவிதிப்புகளும் 01.10.2007 முதல் விதிக்கப்பட்டுள்ளது.<br>111/008/3264 – VLT ரூ.520<br>111/008/3265 – வணிகம் – ரூ.12578/–<br>மேற்படி இரு வரிவிதிப்புகளுக்கு மனுதாரர் நிலுவையின்றி வரி செலுத்தி வருகிறார். இந்நகராட்சி வழக்கில் தெரிவிக்கப்பட்ட வரிவிதிப்பு எண்8779–க்குரிய கேட்பு ரூ. 509649/– 01.10.2007 முதல் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.188 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 5 | இந்நகர் வார்டு எண்.8. பதினெட்டாம்படி நகர் பகுதியில் உள்ள வீட்டின் வரிவிதிப்பு எண்.48329 திரு.சுந்தர்ராஜன் என்பவர் பெயரில் உள்ளதை ரத்து செய்தது தொடர்பாக, மேற்படி நபர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆணையர் காரைக்குடி நகராட்சி அவர்கள் மீது வழக்கு WP (MD) 2532/2013-ல் வழக்கு தொடர்ந்து நகராட்சி சார்பாக திருமதி.எழில்செல்வி வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி வழக்கு நடைபெற்று வந்தது. தற்போது நிர்வாக நலன் கருதி மேற்படி வழக்கினை எழில்செல்வி வழக்கறிஞரிடமிருந்து திரு.பி.மகேந்திரன், நகர்மன்ற வழக்கறிஞருக்கு மேற்படி வழக்கினை மாற்றம் செய்யவும் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.வழக்குக்கு ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.189 அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன |

**6**

காரைக்குடி நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் 36 தானியங்கும் குடிநீர் மையங்கள் தனியார் தொழில் நிறுவனங்கள்/ தொழில் முனைவோர்கள் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்திட ஒப்பந்தப்புள்ளிகள் 23.10.2018–க்குள் வழங்கிட தெரிவித்து ‘Expression of Interest’ விளம்பரம் செய்யப்பட்டது அதில், அதில் கீழ்கண்டவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

1.M/S Dharana Infrastructure Project Private Ltd, Chennai

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகள் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியின் Price bid திறக்கப்பட்டது. அதன்விபரம் பின்வருமாறு

| o | Description of Work | M/S. Dharana Infrastucture Porject Private Ltd, Chennai<br>Rate |
|---|---|---|
| | Establishment of Community Drinking Water Supply System with necessarytreatment units (Approx. 1000 lit / hour Capacity ) including ) O &M for 10 years at – 36 locations | |
| | Rate to be remitted to the municipality (Rupees per 20 Ltr.) | 1.00 |
| | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | `6.90 |
| | Rate to be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) | 1.00 |

`

மேற்கண்டவாறு ` M/S Dharana Infrastructure Project Private Ltd, Chennai நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.190 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 7 | இந்நகராட்சி வார்டு எண்.5 அண்ணா நகர் தேவர் தெருவில் இருந்த ஆர்.சி.சி பாலத்தின் சிமிண்ட் சிலாப் உடைந்து சேதமடைந்து விட்டதால், அதன் வழியாக பொதுமக்கள் வாகனத்திலும் மற்றும் நடந்து செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, சேதமடைந்துள்ள மேற்கண்ட பாலத்தின் சிலாப் முழுவதையும் அப்புறப்படுத்தி விட்டு, புதிதாக ஆர்.சி.சி சிலாப் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.191 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 8 | இந்நகராட்சி வார்டு எண்.10 ஈசப்பா செட்டியார் வீதியில் உள்ள வாரியின் குறுக்கே (சுப்பையா அம்பலம் பள்ளி கீழ்புறம்) இருந்த ஆர்.சி.சி பாலத்தின் சிமெண்ட் சிலாப் மற்றும் பக்க சுவர்கள் இடிந்து விழுந்து விட்டதால் அதன் வழியாக பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளின் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பாலத்தின் வழியாக அப்பகுதி முழுவதற்கும் செல்லும் கனரக வாகனங்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, சேதமடைந்துள்ள பாலத்தை முற்றிலும் அப்புறப்படுத்திவிட்டு, புதிதாக ஆர்.சி.சி பாலம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.192 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | 9 | காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான கல்லுக்கட்டி மேற்கு கடை எண்.8, வரிவிதிப்பு எண்.48ல் அனுபோகம் செய்து வந்த திருமதி.ஜி.மீனாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்ததில் 14.09.2018ம் தேதிய தீர்ப்பில் 04.10.2018ந் தேதிக்குள் கடையை நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் என உத்திரவிட்டது. ஆனால் அன்னார் நீதிமன்ற தீர்ப்பின்படி கடையை ஒப்படைக்காததால் 05.10.2018அன்று நகராட்சி அலுவலர்களால் கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டது. நாளது தேதி வரை மேற்படி கடைக்கு ரூ.4,18,213/– வாடகை நிலுவையில் உள்ளது. எனவே குத்தகைதாரர் மீது வாடகை நிலுவையை செலுத்தக்கோரி நீதிமன்ற வழக்கு தொடரவும் பொது ஏல நடவடிக்கை எடுக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி கடையை பொது ஏலத்தில் விடப்பட்டு கடையை ஒப்படைக்கும் நாள் வரை வாடகையை ரத்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.4657/2018/அ1) | தீர்மான எண்.193 அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டன |

| | | | |
|---|---|---|---|
| | 10 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.29 இரயில்வே பீடர் சாலையில் மரம் பட்டுபோன நிலையில் உள்ளதால், காய்ந்த மரம் கிளைகள் ஏதுமின்றி ஆபத்தான நிலையில் உள்ளது. (புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது) அதனை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.194 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 11 | காரைக்குடி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் டிப்பர் லாரி எண்.TN63 T 2417 தகுதி சான்று பொறுவதற்கு வாகனத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.145000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.தனி அலுவலர் காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.195 அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன |
| | 12 | இந்நகர்மன்ற தீர்மானம் எண்.251, நாள் 31.10.2017ன்படி, இந்நகராட்சியின் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்திடும் பணியினை 9 மாதங்களுக்கு மேற்கொள்ள M/S.தரணி அசோசியேட்ஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு கடந்த 01.11.2017ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பராமரிப்பு பணி காலம் 31.07.2018ல் முடிவடைந்தது. இந்நிலையில் இந்நகராட்சியில் உள்ள அனைத்து தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றி அமைத்திட M/S.TUV SUD South Asia Pvt. Ltd., India நிறுவனம் மூலம் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீட்டிற்கான இறுதி அறிக்கை (DPR on Investment Grade Audit in Street Lighting System- Karaikudi Municipality) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளதாகவும், இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று அதன் பேரில் பணி நடைமுறைக்கு வருவதில் சிறிது காலம் ஆகும் என்பதாலும் இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணியை தொடர்ந்து 01.08.2018 முதல் மூன்று மாத காலத்திற்கு மேற்படி M/S.தரணி அசோசியேட்ஸ், மதுரை நிறுவனத்திடம் முன்னர் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் ஒப்படைப்பு செய்திட நகர்மன்ற தீர்மான எண். 83 ல் நாள் 27.07.2018ல் அனுமதி பெறப்பட்டு, பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பணி முடிய சற்று கூடுதல் நாட்கள் ஆகும் என்பதால் மேலும் இரண்டு மாத காலத்திற்கு (நவம்பர் மற்றும் | தீர்மான எண்.196 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | டிசம்பர்) தெருவிளக்கு பராமரிப்பு பணியை மேற்கண்ட M/s.தரணி அசோசியேட்ஸ், மதுரை நிறுவனம் மூலம் முன்னர் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் ஒப்படைப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| | **13** | சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் திரு. ஆர்.உதயக்குமார், காரைக்குடி என்பவரால் வழக்கு எண்.20298/2018–ல் இந்நகராட்சி ஆணையரை 3–வது பிரிதிவாதி சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி, இவ்வழக்கினை தொடர்ந்து நடத்திட திரு.பி.மகேந்திரன், சென்னை உயர்நீதி மன்றம் மதுரை வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்திடவும் அதற்கான செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2018/எப்2) | தீர்மான எண்.197<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | **14** | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு இனிவரும் காலங்களில் மழை காலங்கள் ஆதலால் நோய் தொற்று மற்றும் வைரஸ் காய்ச்சல் தாக்கத்தை கட்டுபடுத்துவதற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு 10000 கிலோ, பிளிச்சிங் பவுடர் 1000 கிலோ வாங்கிட உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1.அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.198<br>அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன |

| | | | |
|---|---|---|---|
| | 15 | இந்நகராட்சி குடிநீர் விநியோகம் வார்டு எண்.1—ல் நாடார் குடியிருப்பு இரட்டைகுளம் அருகில் உள்ள ஆழ்குழாய் கிணறு 15 HP நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே அதனை உடன் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.21500/— ஆகும். மேலும் நீர்மூழ்கி மின் மோட்டாரை டெக்கான் இன்டஸ்ட்ரீஸ் கோயமுத்தூர் நிறுவனத்திடம் பழுது நிவர்த்தி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடாந்ததையும் மன்றம் அங்கீரிக்கலாம். | தீர்மான எண்.199 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டன |
| | 16 | காரைக்குடி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெஙகு தடுப்பு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், புகை மருந்து தெளிக்க டிசல் புகையாகவும், அதனை இயக்க சிறிய எரிவாயு சிலிண்டர் 300 எண்ணம் வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/— (ஒரு இலட்சத்திற்கு ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.200 அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன |
| | 17 | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 3 சிறிய புகை இயந்திரம் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.15000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.201 அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>18</td>
<td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு சிறிய புகை இயந்திரஙகள் பழுது நீக்கம் செய்ய கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><td>வ.<br><br>எண்.</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை/<br>ஒன்றுக்கு</td></tr>
<tr><td></td><td>திரு.A வெஙகடேசன் போக்கிங சர்விஸ் பாயிண்ட் மெயின் ரோடு, செஙகம் – 606709</td><td>ரூ.3200/–</td></tr>
<tr><td></td><td>மணிகண்டன் போக்கிங சர்விஸ் மெயின் ரோடு, மதுரை</td><td>ரூ.3400/–</td></tr>
<tr><td></td><td>பி.ஆறுமுக நயினார் போக்கிங சர்விஸ் பாயின்ட் அம்பா சமுத்திரம் –627401</td><td>ரூ.3000/–</td></tr>
</table>
எனவே மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ஆறுமுகநயினார், போக்கிங சர்விஸ் பாயிண்ட் அம்பா சமுத்திரம் விலைப்புள்ளி ஏற்கலாம்.<br>
அலுவலகக் குறிப்பு:<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. தனி அலுவலர் காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.202<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டன</td>
</tr>
<tr>
<td></td>
<td>19</td>
<td>காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2018–2019ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழஙகப்பட்டு அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் திருக்கோவில் அருகில் நாடக மேடை அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் பணிக்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டு பணி நடைபெறும் போது இடம் தஙகள் துறைக்கு சொந்தமானது என்று செயல் அலுவலர், அருள்மிகு கொப்புடைய நாயகியம்மாள் திருக்கோவில், காரைக்குடி அவர்களால் காரைக்குடி நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். அதன் வழக்கு எண். WP(MD) NO. 20249/2018 –ல் நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன் பி.ஏ.பில் வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அவர்கள் ஆஜராகவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.7500/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.203<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டன</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>20</td><td>இந்நகராட்சி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் பிற பணிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ் கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th>வ எண்.</th><th>விளம்பர விபரம்</th><th>விளம்பரம் செய்த நாளிதழ்/ நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td></td><td>10 வார்டுகளில் குடிநீர் மிக குறைந்த விலையில் வழஙக தானியஙகும் குடிநீர் மையம் பணி மேற்கொள்ள ஒப்பந்தம் புள்ளி கோரியது</td><td>Trinity Mirror மற்றும் மக்கள் குரல் 05.10.2018</td><td>ரூ.69304/–</td></tr>
</table>
<br>மேற்கண்ட பட்டியலின்படி தொகை ரூ.69,304/– ஐ வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.204<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>21</td><td>சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் திரு.ஜி.ராஜாமணி காரைக்குடி என்பவரால் வழக்கு எண். 20813/2018 தொடரப்பட்டுள்ளது. மேற்படி இவ்வழக்கில் முதல் பிரதிவாதியாக மாவட்ட ஆட்கியர், சிவகஙகை 2, ஆணையர், காரைக்குடி நகராட்சி ஆகியயோர்களை வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்திட திரு.பி.மகேந்திரன் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை கேட்டுக்கொள்ளவும், வழக்கிற்கான செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.கஎண்.1980/2017/எப்2)</td><td>தீர்மான எண்.205<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>22</td>
<td>இந்நகராட்சி பொறியியற் பிரிவில் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணி நடைபெற்று வருகிறது. நடைபெற்று வரும் திட்டப் பணிக்கு கலர் பிரிண்டர் தேவைப்படுவதால் 1 எண்ணம் கலர் டோனர் விநியோகம் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
<table>
<tr><td></td><td>M/s Arul computer, Karaikudi</td><td>ரூ.19,700.00</td></tr>
<tr><td></td><td>M/s EFF One solution Ramanathapuram</td><td>ரூ.19,900.00</td></tr>
</table>
பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s Arul computer, Karaikudi அவர்களின் விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு:<br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.தனி அலுவலர் காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.206<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டன</td>
</tr>
<tr>
<td></td>
<td>23</td>
<td>காரைக்குடி நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பூங்கா இடங்களில் குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் பணிக்கு 3 அடி விட்டமுள்ள தொட்டி, மூடி மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
1. பாரதி நகர் பூங்கா I மற்றும் II<br>
2. செல்லஞ்செட்டி ஊரணி பூங்கா<br>
3. ராகவேந்திரா பள்ளி பூங்கா<br>
4. வைத்தியலிங்கபுரம் பூங்கா I மற்றும் II<br>
5. வடிவேல் அம்பலம் பூங்கா<br>
<u>அலுவலகக் குறிப்பு</u> :<br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.207<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 24 | இந்நகராட்சி வார்டு எண் 18 கண்டனூர் ரோடு மற்றும் டி.டி. நகர் வார்டு எண்.15 புருசோத்தமன் தெரு, வார்டு எண்.34 திருவள்ளுவர் தெரு, வார்டு எண்.26 செல்லப்பன் தெரு வார்டு எண்.6 செக்காலை அண்ணாமலை செட்டியார் தெருவில் குறுக்கு 2வது சந்து ஆகிய வீதிகளில் உள்ள பகிர்மான குழாய் பதிக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் பகிர்மான குழாயில் மண் அடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீடுகளுக்கு செல்லாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி புதிய பகிர்மான குழாய் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.208 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 25 | இந்நகராட்சியில் கணினி பிரிவில் உள்ள கணினியில் மதர் போர்டு பழுதடைந்துள்ளது. கல்லுக்கட்டி வரி வசூல் மையத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. HP Laser printer–க்கு புதிதாக கேட்ரேஜ் வாங்கிடவும் மற்றும் நகராட்சி உரக்கிடங்கில் பயன்படும் கணினி பழுதடைதுள்ளது. எனவே மேற்கண்ட அனைத்து பழுதுகளையும் சரி செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.209 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 26 | இந்நகராட்சி தேவகோட்டை சாலையில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்தில் உள்ள 30 HP நீரேற்று மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை மோட்டார் பம்பை பழுது நீக்கம் செய்வதற்கு கழட்டிய போது அதில் உள்ள pump shft sleeve Bush Impellor மற்றும் Motor shft Bearings -2 nos ஆகியவைகளை குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலகர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.210 அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டன |

| | | | |
|---|---|---|---|
| | **27** | இந்நகராட்சி பொறியியற் பிரிவில் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணிகள் நடைபெற்று வருகிறது. நடைபெறும் பணிகளுக்கு உடனுக்குடன் புகைப்படம் எடுத்து அதனை கலர் பிரிண்ட் போட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயகுநர், மதுரை அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டியதினை தொடர்ந்து, பொறியிற் பிரிவில் உள்ள கலர் பிரிண்டர் மிஷினில் கலர் டோனர் தீர்ந்து விட்டபடியால் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே 1 எண்ணம் கலர் டோனர் வாஙகிட உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.211<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **28** | இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு 8–ல் உள்ள 20HP மின் மோட்டார் பம்ப் இயங்கவில்லை. எனவே அதனை உடன் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/– ஆகும். மேலும் நீர்மூழ்கி மின் மோட்டாரை டெக்கான் இன்டஸ்ட்ரீஸ் கோயம்புத்துார் நிறுவனத்திடம் பழுது நிவர்த்தி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடாந்ததையும் மன்றம் அங்கீரிக்கலாம். | தீர்மான எண்.212<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்கப்பட்டன |
| | **29** | இந்நகராட்சி உரக்கிடஙகில் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்கும் பணிக்காக இயஙகி வந்த pre processing unit ல் ஆட்டோ மெட்டிக் பேரிங போட்டில் பழுதாகி உள்ள 3 எண்ணம் Contactor புதிதாக பொருந்திடும் பணிக்கு 27.09.2018–ல் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>\| \| Sunstar Scientifc Coimbatore \| **16,136.00** \|<br>\| \| A.P TEC Coimbatore \| **22,537.00** \|<br><br>பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழஙகிய Sunstar Scientifc Coimbatore அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண்.213<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>30</td>
<td>
தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019 – திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக கழனிவாசல் பகுதியில் நுண்உரம் செயலாக்க மையம் அமைத்து அதனை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் பின்வருமாறு.<br>
1. திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர் காரைக்குடி.<br>
2. திரு. D..செந்தில்குமார். ஒப்பந்ததாரர் காரைக்குடி.<br>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்ட விபரம் , பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவிகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 4.89% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. D. செந்தில்குமார், ஒப்பந்ததாரர் காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 8.74% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்ததாரரிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில், திரு. SP.கருங்கப்பன், காரைக்குடி. ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின் வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவிகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 4.78% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. D. செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 8.74% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட திரு. SP.கருங்கப்பன் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீததத்திற்குள் உள்ளது. மேலும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டைவிட
</td>
<td>தீர்மான எண்.214 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 5 சதவீதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியில் கையேட்டில் விதி எண்.2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மதிப்பீட்டை விட 4.78 % அதிகம் உள்ள திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>அனுமதிக்கலாம். | |
| | 31 | தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019 – திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக சூடாமணிபுரம் பகுதியில் நுண்உரம் செயலாக்க மையம் அமைத்து அதனை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் விபரம் பின்வருமாறு.<br>1. திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர் காரைக்குடி.<br>2. திரு. D..செந்தில்குமார். ஒப்பந்ததாரர் காரைக்குடி.<br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்ட விபரம் , பின்வருமாறு.<br><br>வ.எண் \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்த சதவிகிதம்<br>1 \| திரு. SP. கருங்கப்பன், ஒப்பந்ததாரர்,காரைக்குடி. \| மதிப்பீட்டை விட 4.89 % அதிகம்<br>2 \| திரு. D. செந்தில்குமார், ஒப்பந்ததாரர்,காரைக்குடி. \| மதிப்பீட்டை விட 8.74 % அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்ததாரரிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில், திரு. SP.கருங்கப்பன், காரைக்குடி. ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின் வருமாறு.<br><br>வ.எண் \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்த சதவிகிதம் | தீர்மான எண்.215<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>திரு. SP. கருங்கப்பன்,ஒப்பந்ததாரர்,காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 4.76 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. D. செந்தில்குமார்,ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 8.74 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட திரு. SP.கருங்கப்பன் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீததத்திற்குள் உள்ளது. மேலும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டைவிட 5 சதவீதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியில் கையேட்டில் விதி எண்.2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
இந்நிலையில் மேற்கண்ட மதிப்பீட்டை விட 4.76 % அதிகம் உள்ள திரு. SP.கருங்கப்பன், ஒப்பந்ததாரர் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>32</td>
<td>
தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019 – திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக சேர்வார் ஊரணி பகுதியில் நுண்உரம் செயலாக்க மையம் அமைத்து அதனை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் பின்வருமாறு.<br>
1. திரு. RVK. வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர் , காரைக்குடி.<br>
2. திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர் , காரைக்குடி.<br>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்ட விபரம் , பின்வருமாறு.
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவிகிதம்</td></tr>
<tr><td>1.</td><td>திரு. RVK. வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர் , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 9.60 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர் , காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 13.84 % அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட கூடுதலாக உள்ளதால்
</td>
<td>தீர்மான எண்.216<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஒப்பந்ததாரரிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில், திரு. RVK. வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர் காரைக்குடி. ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின் வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. RVK. வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர் காரைக்குடி. | மதிப்பீட்டை விட 4.90 % அதிகம் |
| 2. | திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர் , காரைக்குடி. | மதிப்பீட்டை விட 13.84 % அதிகம் |

மேற்கண்ட திரு. RVK. வெங்கடாசலபதி, காரைக்குடி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீததத்திற்குள் உள்ளது. மேலும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டைவிட 5 சதவீதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியில் கையேட்டில் விதி எண்.2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட மதிப்பீட்டை விட 4.90 % அதிகம் உள்ள திரு. RVK. வெங்கடாசலபதி, ஒப்பந்ததாரர் காரைக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 33 | தூய்மை இந்தியா இயக்கம் 2018–2019 – திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்காக செஞ்சை பகுதியில் நுண்உரம் செயலாக்க மையம் அமைத்து அதனை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 10.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் பின்வருமாறு.<br>1. M/S . நாகராஜன் கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பி லிட்), சென்னை.<br>2. M/S . அ ரபிந்தோ கன்ஸ்ட்ரக்ஸன் மதுரை<br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்ட விபரம் , பின்வருமாறு. | தீர்மான எண்.217 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/S . நாகராஜன் கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பி லிட்), சென்னை. | மதிப்பீட்டை விட 14.56 % அதிகம் |
| 2. | M/S . அ ரபிந்தோ கன்ஸ்ட்ரக்ஸன், மதுரை | மதிப்பீட்டை விட 23.41 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட கூடுதலாக உள்ளதால் நிறுவனத்திடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில், M/S . நாகராஜன் கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பி லிட்), சென்னை நிறுவனம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாளர்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளது. அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின் வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/S . நாகராஜன் கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பி லிட்), சென்னை. | மதிப்பீட்டை விட 4.96 % அதிகம் |
| 2. | M/S . அ ரபிந்தோ கன்ஸ்ட்ரக்ஸன், மதுரை | மதிப்பீட்டை விட 23.41 % அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட M/S.நாகராஜன்கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பிலிட்), சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீததத்திற்குள் உள்ளது. மேலும், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டைவிட 5 சதவீதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியில் கையேட்டில் விதி எண்.2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மதிப்பீட்டை விட 4.96 % அதிகம் உள்ள M/S . நாகராஜன் கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி (பி லிட்), சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | |
| | 34 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெறும் திட்டப்பணிக்கு Autocad கணிணி ஆப்ரேட்டர் பணி செய்தமைக்கு மூன்று மாதத்திற்கு தொகை வழங்கிட ரூ.30,000/–க்கு நகர்மன்ற தீர்மான எண்.410 நாள் 28.03.2018 அன்று மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு தொகை ரூ.36,800/– வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.6800/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண்.218 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி